بسم الله الرحمن الرحيم

# A LETTER FROM TAMIL NADU JAMAAT UL SAHIH AL ISLAM DAWA DEPARTMENT RENDERING ITS 15TH CENTURY HIJRA GOOD NEWS TO AHMADIYYA MUSLIM JAMAAT TAMIL NADU SOUTH ZONE AMIR A.P.Y ABDHUL QADHIR SAHIB.

**( தமிழ் நாடு அஹ்மதியா முஸ்லீம் ஜமா அத்தின் தென் மண்டல அமீர் A.P.Y அப்துல் காதீர் சாஹிப்புக்கு, தமிழ் நாடு ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ‘‘தாவா’’ டிப்பார்ட்மென்ட் வழங்கியுள்ள ஹிஜ்ரா 15-ம் நூற்றாண்டின் நற்செய்தியைப் பற்றிய கடிதம்).**

السلام عليكم,

**பெரும் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய தமிழ்நாடு அஹ்மதியா முஸ்லீம் ஜமாத்தின் தென் மண்டல அமீர் ஜனாப் A.P.Y அப்துல் காதீர் சாஹிப் அவர்களுக்கு ஜமா அத்தேச் சஹீஹில் இஸ்லாம் தஆவா டிப்பார்ட்மென்று தெரியப்படுத்திக் கொள்வது.**

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வாக்குறுதியின் படியும் நபிகள் நாயாகம் (ஸல்) அவர்களின் தீர்க்க தரிசனத்தின் படியும் ஹிஜ்ரா 14-ம் நூற்றாண்டில் மஹ்தி மஸீஹாக அவதாரமெடுத்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அ) மீது நம்பிக்கைக் கொள்ள இறைவன் அருளால் பாக்கியம் பெற்ற தாங்களின் அறிவுக்கு இந்த 15 ஆம் நூற்றாண்டின் நற்செய்தியை கொண்டு வருவதற்கு முன்னதாக சில கேள்விகளை வினவ விரும்புகின்றோம்.

கடந்த சில வருடங்களாக அஹ்மதியத்திற்காக அதாவது உண்மையான இஸ்லாத்திற்காக தொண்டாற்றி வரும் தாங்கள், இஸ்லாத்திற்கும் இறையாட்சிக்கும் மாறாக செயல் ஆற்றுவீர்களா?

இறை வேதமாம் திருமறையின் திரு வசனங்களுக்கும் அது கூறும் சட்டத்திட்டங்களுக்கும் மதிப்பளிப்பவரா?

நபி (ஸல்) வின் பொன் மொழியாம் திரு மொழிகளிலும் அப்பொன் மொழிகளனைத்தும் அவ்வாறே விடியும் என்பதில் சிறு துளியேனும் ஐய்யம் கொள்பவரா?

ஹிஜ்ரா 14- ஆம் நூற்றாண்டின் புண்ணியமமாம் இமாம் மஹ்தியும் மஸீகுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அ) அவர்களின் போதனைகளிலோ அவரது எழுதுகோல் வடித்த புத்தகத் தாள்களிலோ சற்றேனும் சந்தேகம் கொள்பவரா?

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அ) க்கு பிறகு தோன்றிய, அதாவது ஒருவருக்கு பின் மற்றொருவர் என்ற வகையில் மக்களால் தேர்ந்தெடுக்கின்ற அஹ்மதியா கலீ.ஃ.பாக்களே இறுதி நாள் வரையிலும் ஆட்சி நடத்துவார்கள் என்றும் தூய இஸ்லாத்தில்

இனி ஒரு முஜத்தீதோ, நபியோ, இறைத் தூதரோ, இறுதி நாள் வரையிலும் தோன்ற மாட்டார்கள் என்றும் உள்ள அடிப்படையில்லாத தத்துவத்தில் நிலைக் கொள்பவரா?

இவ்வகையிலான கேள்விகளிலொன்றும் தாங்கள் அகப்பட மாட்டீர்கள் என்று நாங்கள் நம்பிக் கொள்ளலாமா!

அபுதாவூத் என்ற கதீஸில் வந்துள்ள நபி (ஸல்) வின் தீர்க்கதரிசனத்தின் படி ஹிஜ்ரா1 ஆம் நூற்றாண்டு முதல் ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் இஸ்லாமின் சகதியை தூர் வாரி செழிப்பும் அழகும் ஊட்ட வந்த ஒவ்வொரு முஜத்தீதயும் ஏற்றுக் கொள்ளும் தாங்கள் அதே தொடரில் இஸ்லாத்திற்கு சிறப்பும் வனப்பும் ஊட்ட வந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அ) அவர்களையும் சந்தேகமின்றி ஏற்றுக் கொண்டிருக்கின்றீர்கள். அப்படியென்றால், நபி (ஸல்) வின் தீர்க்க தரிசனத்தின் படி ஒவ்வோரு நூற்றாண்டின் தலைப்பிலும் ஒவ்வொரு சீர் திருத்தாளர்கள் வருகை தந்த புனித இஸ்லாமில் இந்த 15-ஆம் நூற்றாண்டிலும் ஒரு முஜத்தீத் வர வேண்டியது அவசியமல்லவா? அவசியமென்றால் ஹிஜ்ரா 15 ஆம் நூற்றாண்டை நாம் தொட்டு விட்டோம். இந்த நூற்றாண்டில் முஜத்தீத் ஏன் வர வில்லை. இனி வர மாட்டார்கள் என்று தாங்கள் நம்பிக்கை கொள்கிள்றீர்களா? அறநெறியைக் காட்டி தரும் பொது மறையாம் இறை மறையின் தூய வசனங்களிலும், மனித குலத்தின் வழிகாட்டியாக விளங்கும் முன் மாதிரியாம் கோமான் நபிகள் நாயாகம் (ஸல்) வின் பொன் மொழிகளிலும், நபி (ஸல்) வின் ஆன்மீக புதல்வனும் இஸ்லாத்தின் புரட்சி நாயாகனுமான ஹஸ்ரத் அஹமது (அ) மின் போதனைகளிலும் முழுமையாக ஈமான் கொள்ளும் எந்த ஓர் நபருக்கும் அவ்வாறு ஒரு பொழுதும் நம்பலாகாது. ஏனெனில் இறை வசனங்கள் ஒரு பொழுதும் தவறாகி போவதில்லை. ஆகையால் இந்த நூற்றாண்டிலும் இறை வெளிப்பாடுகளுடன் ஒரு இறைத் தூதர் நிச்சயமாக வர வேண்டும். ஆம், இந்த ஹிஜ்ரா 15-ஆம் நூற்றாண்டில் இறை கட்டளையின் படி இத்தரணியில் உதித்த ஆன்மீக ஆதித்தியனைக் குறித்த நற்செய்தியைத் தெரிவிக்கின்றோம்.

ஆப்பிரிக்கன் பூகண்டத்தில் மௌரீஸியஸ் என்ற நாட்டைச் சார்ந்த முனீர் அஹமது அஸீம் சாஹீப் என்பவர் தான் இறைவனால் எழுபப்பட்ட முஜத்தீத் என்றும், கலீ.ஃபத்துல்லாஹ் என்றும் நபி, ரசூல் என்றும் வாதம் செய்து வருகின்றார். அவர் தன்னிடம் இறைவன் பேசுவதாகவும் இறையறிவுப்புகள் கிடைப்பதாகவும் இறை ரகசியங்களை வெளிப்படுத்திக் கொடுப்பதாகவும் எல்லா வல்ல அல்லாஹ்வின் மீது ஆணைப் போட்டு கடந்த 14 வருடங்களாக விளம்பரப்படுத்தி வருகின்றார். ஓவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் அவர் நடத்தி வருகின்ற குத்து.ஃபாக்களில் தான் பெற்ற இறையறிவுப்புகளை உலக மக்களிடம் எடுத்துரைக்கின்றார். இறைவன் அறிவிப்பையொட்டி அன்னாரின் கரங்களால் தோற்றுவித்த அமைப்பேயாகும், ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம்.

எவர் ஒருவர் அல்லாஹ்வைச் சாட்சியாக்கிக் கொண்டு நபி என்றும், ரசூல் என்றும் வாதம் செய்கின்றாரோ நிச்சயமாக நீங்கள் அவர் மீது நம்பிக்கைக் கொள்ளுங்கள் என்று திருமறை திட்ட வட்டமாக நமக்கு விழிப்புணர்வு வழங்குகின்றது. இறைத் தூதர்களை ஏற்றுக் கொண்டதினால் ஏதேனும் ஒரு சமூதயத்தையோ மக்களையோ அல்லாஹ் அழிவிற்கும் தண்டனைக்கும் ஆளாக்கினான் என திருமறை எங்கும் கூறவில்லை. அதே கணம் இறை தூதர்களை நிராகரித்ததினால் ஒவ்வொரு சமூதயத்திற்கும் ஏற்பட்ட தீமைகளையும், அழிவுகளையும் பற்றி திருமறை மேலும் மேலும் அதன் வசனங்களின்

வாயிலாக நம்மை நினைவூட்டுகின்றது. இனி ஒரு வேளை வாதம் செய்யும் நபர் பொய்யாளராக இருந்தால் அதற்குரிய தண்டனை அவருக்கேயன்றி வரை ஏற்றுக் கொள்ளும் மக்களுக்கு அல்ல என்றும் மாறாக, அவர் மெய்யராக இருந்து அவரை நிராகரித்துவிட்டால் அதற்குரிய தண்டனை அம்மக்களுக்கேயன்றி அவருக்கு அல்ல என்று திருமறை சந்தேகத்திற்கு இடமின்றி சாட்சி பகிர்கின்றது. ஆகையால் பொய்யரோ, மெய்யரோ ஏவரானாலும் சரி, இறை வெளிப்படுகளுடன் வாதம் செய்யும் நபரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே திருமறையின் பாடம். அது சற்று நன்கு உங்களுக்கு தெரியுமல்லவா?

திருமறை வசனங்கள் அவ்வாறு நம்மை கற்பிக்கின்றதால், இந்நூற்றாண்டில் இறைவனால் அனுப்பப்பட்ட நபி என்றும், ரசூல் என்றும், கலீ.ஃ.பத்துல்லாஹ் என்றும், முஜத்தீத் என்றும் இறைவன் மீது ஆணையிட்டு கூறி, இறை வெளிப்பாடுகளுடன் வாதம் செய்து வரும் ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் சாஹீப் எனபவரை கள்வனென்றும், பைத்தியக் காரனென்றும், குழப்பக்காரனென்றும் முத்திரைக் குத்தி தூக்கி வீச நினைப்பது எந்த விதத்தில் நியாயம் ? எந்த விதத்தில் அது நீதி?

**ஹிஜ்ரா 14-ம் நூற்றாண்டோடு இறைவன் ஊமையாகி விட்டானோ? இனி இஸ்லாத்திற்கு இறைவன் எவ்வித நன்மைகளும் செய்ய மாட்டானோ? விண்ணிலிருந்து மண்ணுலகிற்கு இறைவனால் அனுப்பப்படும் அருள்களெல்லாம் இடை விழியில் தங்கி விட்டதோ? இறையாண்மையின் மிக சிறந்த நடைமுறையான இறைத் தூதர்களை தோற்றுவிக்கும் செயல் ஹிஜ்ரா 14 ஆம் நூற்றாண்டோடு தடைச் செய்யப்பட்டதோ? நபி (ஸல்) வின் உம்மத்திற்கு இமாம் மஹ்திதான் இறுதி தூதரோ? இறைவனால் இறக்கப்பட்ட திருக் குர் ஆனின் திரு வசனங்களும் நபிகள் நாயாகம் (ஸல்) வின் பொன் மொழிகளும் மஸீஹெ மெள ஊத் (அ) மின் போதனைகளும் பொய்யாகி போனதோ? இவ்வகை கேள்விகளுக்கு மதிப்பிற்குரிய அமீர் சாஹீப் பதிலளிக்க வேண்டும்.**

சூரத்துல் அந்நூறில் ‘‘வ.ஃ.தல்லாஹ்’’ என்று துவங்கும் வசனத்திற்கு விளக்கமாக திரு நபி (ஸல்) அவர்கள் கூறியதாக வந்துள்ள ஒரு ஹதீஸேயாகும், **‘‘ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் இஸ்லா மத சீரமைப்புக்காக ஒவ்வொரு சீர்திருத்தாளர்களை அல்லாஹ் தோற்றுவிப்பான்’’** (அபூதாவூத்) என்பது. இஸ்லா மத சீரமைப்புக்காக 14-ம் நூற்றாணடில் அவதரித்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹ்ஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அ) அவர்கள் ‘‘வ.ஃ.தல்லாஹ்’’ (24-56) என்று துவங்கும் திரு குர் ஆன் வசனத்திற்கு இருபதுக்கு மேற்பட்ட இடங்களில் விளக்கமளித்திருக்கின்றார். அதில் மல்.ஃ.பூஸாத் உள்ளன, அஹமது (அ) மின் நூல்கள் உள்ளன. அன்னாரின் கடிதங்களும் விளம்பரங்களும் சொற்பொழிவுகளும் உள்ளன. அவைகளிலனைத்தும் ‘‘வ.ஃ.தல்லாஹ்’’ என்று துவங்கும் திரு குர் ஆன் வசனத்தை, ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் இஸ்லா மத சீரமைப்புக்காக இறைவனால் தோற்று விக்கும் முஜத்தீதுகளுடன் ஒப்பிட்டுக் கொண்டே அன்னார் சர்சை எழுப்புகின்றார். அதிலிருந்து மிக தெளிவாக புரிய வரும் ஒரு உண்மை என்னவென்றால் சூராத்துல் அந்நூறில் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள கிலா.ஃ.பத் வாக்குறுதியில் கூறப்படும் கலீ.ஃ.பாக்கள் என்பது மக்கள் கரங்களால் தேர்ந்தெடுக்கப்படும் அஹ்மதியா கலீ.ஃ.பக்களை குறித்தல்ல மாறாக, ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் அல்லாஹ்வே நேரடியாக நியமித்து வரும் முஜத்தீதுகளை குறித்தாகும்.

மேல் சுட்டிக் காட்டிய திருமறையின் தூய்மையான திரு வசனமும், அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அளித்த விளக்கமும், கோமான் (ஸல்) ன் ஆத்மீக புதல்வரான மிர்ஸா குலாம் அஹமது (அ) அவர்கள் அதற்கு வழங்கிய சாட்சியமும் அவ்வாறே அரங்கேறும் என்பதில் எவ்வித ஐய்யமும் இல்லை.

ஆதவன் தன் திசை மாறி எழுந்தாலும் சரி, வானில் வீண்மீன்கள் யாவும் சிறு தூள்களாக சிதறடிக்கப்பட்டலும் சரி, புவியே பிரளயம் வந்து மாய்ந்து மண்ணடிந்து போனலும் சரி மேல் கூறிய திருமறையின் வசனத்திற்கோ, திரு நபியின் பொன் மொழிகளுக்கோ, மஹ்தி மஸீஹின் போதகைகளுக்கோ எவ்வித மாற்றமும் எற்ப்படாது. அதுவே உண்மை.

ஆகையால் இந்நூற்றாண்டின் கலீ.ஃ.பத்துல்லாஹ் என்றும், முஜத்தீது என்றும் நபி, ரசூல் என்றும் வாதம் செய்து வரும் ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அ) மின் கரங்களால் தோற்றுவித்த இந்த புனிதமான ஜமா அத்துச் சஹீஹில் இஹ்லாமின் சார்பாக உங்களுக்கு பெரும் மதிப்போடு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைப் பற்றி அதிகம் அறிவதற்கும் அதில் இணைந்து தொண்டாற்றுவதற்கும் அது வழியாக வாழ்க்கையின் உண்மையான லட்சியத்தை அடைவற்கும் தாங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தாங்களின் பதிலுக்காகவும் வருகைக்காகவும் பொறுமையுடன்,

**BY**

**Jamaat Ul-Sahih-al-Islam**
*Dawa Department*
Tamil Nadu *(Regd.No:A/693)*
Web: www.jamaat-ul-sahih-al-islam.com

**ஜமாத்து-உல்-சஹீஹ்-அல்-இஸ்லாம**
**தஆவா டிப்பார்ட்மென்று. தமிழ்நாடு**
**E-Mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817